உ

கடவுள் துணை

குள்ளத்தாரா சிந்து



சென்னை
கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.
1915.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

குள்ளத்தாரா-சிந்து

விநாயகர் வணக்கம்.

விருத்தம்

சிந்துசூழலகிலுள்ளோர் திளெபலங்கொள்ள வேண்டி, விந்தைசேர்மனதக்கோதும் வியன்மதிமா னதன்னை, கந்தமாசிந்தாய்கூறக்கரிமுகனுபயபொற் றாள், கொந்தலர்க்கழலைகளுங் கூப்பியேபணிகுவா மால்.

நூல்முகம்.

சிந்து-கண்ணிகள்.

சித்திவிநாயகனே-குள்ளத்தாரா-நீ
சிந்தைதனிலேவகிப்பாய் ஏ-குள்ளத்தாரா
எருவிக்கி தில்லாலே நீமுன்னாலே நான்பின்னாலே
சிந்தைதனிலேவகிப்பாய் ஏ-குள்ளத்தாரா. க

பாடலீசன் பொற்பதத்தை ஏ-குள்ளத்தாராநீ
பக்தியுடன்போற்றிசெய்வாய் ஏ-குள்ளத்தாரா. உ
பேர்பெரியநாயகியை ஏ-குள்ளத்தாராநீ
வெற்றியுடன்போற்றிசெய்வாய் ஏ-குள்ளத்தாரா
வேலவனைப்போற்றிடுவாய் குள்ளத்தாராநின்
வினைகளகன்றிடுவாய் குள்ளத்தாரா ௩
வள்ளிதெய்வானைபதம் குள்ளத்தாராநீ
வண்மையுடன்போற்றிசெய்வாய் குள்ளத்தாரா
ஆதிமூலப்பொருளை குள்ளத்தாராநீ
அன்புடனேபோற்றிசெய்வாய் குள்ளத்தாரா
செந்திருவின்பொற்பதத்தைக் குள்ளத்தாராநின்
சிந்தையிலிருத்திடுவாய் குள்ளத்தாரா
தாயார்சரஸ்வதியை குள்ளத்தாராநீ
சந்ததமும்போற்றிசெய்வாய் குள்ளத்தாரா அ
ஆருயிர்க்குருதுணையாம் குள்ளத்தாரா-என
தன்பின்வழியோடக்கிற் குள்ளத்தாரா கூ
சந்திரகாந்தமேடையுண்டு குள்ளத்தாரா-வதைச்
சாரவும்பொன்னெணியுண்டு குள்ளத்தாரா ய
பன்னிருகால்வாசியுண்டு குள்ளத்தாரா-வத்தப்
பற்றப்பரிகத்தூணுண்டு குள்ளத்தாராநீ யக

சோமவட்டமாம்பதியிற் குள்ளத்தாராநீ
சுகித்தமூர்தமுண்டிருப்பாய் குள்ளத்தாரா ௰௨
ஏமனுமடறுவானோ குள்ளத்தாராநீ
என்வழிநடப்பையாகில் குள்ளத்தாரா ௧௩
இந்திரப்பட்டமும்பெறுவாய் குள்ளத்தாரா-சொல்
இருவினையகன்றிடுவாய்குள்ளத்தாரா ௧௪
கட்டிலுண்டுமெத்தையுண்டு குள்ளத்தாராநாம்
கலந்துசுகிக்கலாமே குள்ளத்தாரா ௧௫
தலையிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா-ரத்ன
சடைபில்லைதானுமுண்டு குள்ளத்தாரா ௧௬
சடைநாகந்தானுமுண்டு குள்ளத்தாரா-வளைதச்
சார்ந்தகுச்சுகுப்பியுண்டு குள்ளத்தாரா ௧௭
காதிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா-நல்ல
கம்மல்சிமிக்கியுண்டு குள்ளத்தாரா ௧௮
கொப்புமுருகுமுண்டு குள்ளத்தாரா-நற்
கொக்களப்பொன்னோலையுண்டு குள்ளத்தாரா ௧௯
சந்திரப்பாவலுடனே குள்ளத்தாரா-நல்ல
னைத்தசம்புலுமுண்டு குள்ளத்தாரா ௨௰
கந்தமூக்குத்தியுண்டு குள்ளத்தாராநீ
[illegible]ணயமாய்ப்பூட்டிக்கொள்ளக் குள்ளத்தாரா ௨௧

கழுத்திலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா-உயர்
கண்டசரமாலையுண்டு குள்ளத்தாரா ௨௨

கைக்குத்தங்கக்காப்பமுண்டு குள்ளத்தாரா
கனத்தகொலுசுமுண்டு குள்ளத்தாரா ௨௩

இடையிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா
இசைந்தஒட்டியாணமுண்டு குள்ளத்தாரா

பாதசரதண்டையுண்டு முள்ளத்தாராநீ
பண்புடனணிந்துகொள்ளக் குள்ளத்தாரா ௨௫

விரலிற்றரித்திடவுங் குள்ளத்தாரா-வெகு
விந்தைமோதிரங்களுண்டு குள்ளத்தாரா ௨௬

இழையாயிரம்பொன்பெற்ற குள்ளத்தாரா-உனக்கு
சித்திரவண்ணச்சேலையுண்டு குள்ளத்தாரா ௨௭

சரிகைரவிக்கையுண்டு குள்ளத்தாரா-திகழ்
தங்கவங்கிருல்லையுண்டு குள்ளத்தாரா ௨௮

பத்துலட்சம்விலையுள்ள குள்ளத்தாரா-உயர்
புங்களாக்கள்-தானுமுண்டு குள்ளத்தாரா ௨௯

தங்கத்தாலேகிண்ணியுண்டு குள்ளத்தாரா-நீ
சாதமருந்திடவே குள்ளத்தாரா ௩௰

வெள்ளிப்பாத்திரங்களுண்டு குள்ளத்தாரா-நீ
வேணதையனுபவிப்பாய் குள்ளத்தாரா ௩௧

கைப்பிடிக்கக்கால்பிடிக்கக் குள்ளத்தாரா-சொலுங்
கனத்ததோழிகளுண்டு குள்ளத்தாரா ௩௨
ஏரிச்சவாரிசெய்யக் குள்ளத்தாரா-உனக்
கிசைந்தபல்லாக்குமுண்டு குள்ளத்தாரா ௩௩
தந்தநாற்காலியுண்டு குள்ளத்தாரா-நீ
சார்ந்துகொண்டிருப்பதற்குக் குள்ளத்தாரா ௩௪
சோபாக்கள்தானுமுண்டு குள்ளத்தாரா-என்
சுந்தரியேநீயிருக்கக் குள்ளத்தாரா ௩௫

பொன்னூஞ்சற் பலகையுண்டு குள்ளத்தாராஎன்
பொற்கொடியேயாடுதற்கு குள்ளத்தாரா ௩௬
கன்னியமாய்ச் சுகந்த குள்ளத்தாரா-நல்ல
நாத்திமாரனேகருண்டு குள்ளத்தாரா ௩௭
மாமியுண்டுமாமனுண்டு குள்ளத்தாரா
மைத்துனாரனேகருண்டு குள்ளத்தாரா ௩௮
சந்துமுண்டுபொந்துமுண்டு குள்ளத்தாரா
ஜாடைசெய்துகூப்பிடவுங் குள்ளத்தாரா ௩௯
தென்னமரச்சோலையுண்டு குள்ளத்தாரா-நீ
சிந்தைகனிந்தாடவடி குள்ளத்தாரா

பாக்குமரச்சோலையுண்டு குள்ளத்தாரா-நீ
புகுந்துவிளையாடவடி குள்ளத்தாரா. ௪௰

கற்பகத்தருவுமுண்டு குள்ளத்தாராநீ
கருதியதெல்லாந்தரக் குள்ளத்தாரா ௪௨

கெடிலந்தியுமுண்டு குள்ளத்தாரா-வதின்
கிளர்கடுக்காலுமுண்டு குள்ளத்தாரா ௪௩

உன்னைநம்பிநானிருந்தால் குள்ளத்தாரா-இந்த
உலகம்பொருக்கலையே குள்ளத்தாரா ௪௪

அந்தமுள்ளமாதமசே குள்ளத்தாரா
யன்புடனருகில்வாராய் குள்ளத்தாரா ௪௫

கிளைநேர்மொழியிருளே குள்ளத்தாரா-நீ
கிருபைசெய்துவாராயோடி குள்ளத்தாரா ௪௬

மயில்போலஞ்சாயலாளே குள்ளத்தாரா-என்
மனதுமுருகாதோடி குள்ளத்தாரா ௪௭

அன்னநடைமாதேயடி குள்ளத்தாரா-உன்
னகமுமிரங்காதோடி குள்ளத்தாரா ௪௮

அடைக்காயும்வெள்ளிலையும் குள்ளத்தாராவெனக்
கருந்தவரியாயோடி குள்ளத்தாரா ௪௯

வாசனைதிரவியங்கள் குள்ளத்தாராநீ
வகைவகையாய்ப்பூசிக்கொள்வாய் குள்ளத்தாரா

சண்பகமலர்நிதமும் குள்ளத்தாரா-நீ
சம்பிரமாய்முடித்துக்கொள்வாய் குள்ளத்தாரா.

பாடலீசனைபொற்பதத்தைக் குள்ளத்தாரா-நீ
பத்தியுடன்சேவைசெய்வாய் குள்ளத்தாரா ருஉ

பாலும்நீரும்போலவடி குள்ளத்தாரா-நாம்
பண்புடனேவாழ்ந்திருப்போம் குள்ளத்தாரா. ருங

மங்களமாம்வாழ்ந்திருப்பாய் குள்ளத்தாரா-இந்த
வையகமுள்ளவுமடி குள்ளத்தாரா ருச

குள்ளத்தாராசிந்து.

முற்றிற்று.
